**செய்தி வெளியீடு எண்: 362** **நாள்: 21.06.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

தொழிலாளர் துறை, சென்னை மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர் ஆட்சி எல்லையில் காலியாக உள்ள 21 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, 14.11.2018 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. அவ்வறிவிக்கையின்படி பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 24.06.2019 அன்று முதல் நடைபெறும் என அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. நிர்வாக காரணங்களால் மேற்கண்டவாறு 24.06.2019 அன்று முதல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு மேற்கண்ட அனைத்து மாவட்டங்களிலும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகின்றன.

கூடுதல் தொழிலாளர் ஆணையர்
சென்னை - 6.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**